TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044306

1. District : மாவட்டம் கரூர்  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு  Year: ஆண்டு 2023  FIR No.: மு.த.அ. எண் 02/AC/2023  Date: நாள் 09.05.202

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF  Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: CORRUPTION ACT 1988  Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: AS AMENDED IN 2018.  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 28.4.2023  Date to : நாள் வரை மதியம் சுமார் 02.00 மணி
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 06.5.2023 / 08.05.2023  Time to : நேரம் வரை காலை செல்போன் மூலம் / மாலை செல்போன் மூலம்

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.05.2023  Time : நேரம் மாலை. 5.00 மணி.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08. 05. 2023  Time : நேரம் மாலை 5.00 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும்; எத்திசையும் சுமார் 40.கி.மீ தென் கிழக்கே

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக பிரிவு அலுவலகம். கொசூர். கடவூர். T(K) கரூர் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. தங்கராசு  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. வீரச்சங்கன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37/2023  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி கதவு எண். 11/230, ஒட்டப்பட்டி, கொசூர். கடவூர் (TK). கரூர் (DT)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. சேகர், போர்மேன், பிரிவு அலுவலகம். தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கொசூர். கடவூர் (TK) கரூர். மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

சி. தங்கராசு

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09.05.2023 AT. 10.15 HRS

Name: பெயர் P. தங்கமணி.
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .........
ஊ. த. க. பாரிவு. கரூர். மாவட்டம்

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.02/AC/2023 u/s 7(a) of The PC Act, 1988 as amended by The PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் தங்கமணி ஆகிய நான் 08.05.2023 ஆம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது V.தங்கராசு, த/பெ.வீரசங்கன், கதவு எண்.11/230, ஒட்டப்பட்டி, கொசூர், கடவூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்- V.தங்கராசு, த/பெ.வீரசங்கன், கதவு எண்.11/230, ஒட்டப்பட்டி, கொசூர், கடவூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் பெறுதல்- லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர் மாவட்டம்.

நான் கரூர் மாவட்டம் கடவூர் தாலுக்கா, ஒட்டப்பட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திரு.ரங்கன் என்ற அண்ணனும், கன்னியம்மாள் என்ற அக்காவும் உள்ளனர். எனது அப்பா ஒட்டப்பட்டியில் சொந்தமாக 4 ஏக்கர் நிலத்தை கடந்த 1987-ல் அவரது பெயரில் வாங்கி விவசாயம் செய்து வந்தார். அவர் அந்த விவசாய நிலத்தில் சர்வே எண்.4/3A-ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு தமிழக அரசு அறிவித்த ரூ.50000/-ம் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு கடந்த 2010 ஆம் ஆண்டு குளித்தலையில் உள்ள EE அலுவலகத்தில் விண்ணப்ப கட்டணம் ரூ.50/- மற்றும் கட்டணம் ரூ.500/- அவரது பெயரில் செலுத்தி விண்ணப்பித்திருந்தார். அந்த விண்ணப்ப பதிவெண்.373/23.07.2010-ஆகும். அதன் பிறகு எனது அப்பா கடந்த 2021-ம் வருடம் சர்வே எண்கள்.4/3A-ல் உள்ள நிலம் மற்றும் இதர சர்வே எண்களில் உள்ள விவசாய நிலம் 4 ஏக்கரை அவருடைய பெயரிலிருந்து எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். இந்நிலையில் கடந்த 2021-ம் வருடம் கடைசியில் கொசூர் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து எனது தந்தை பெயரில் ரூ.50000/-ம் சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கேட்டு ஏற்கனவே கொடுத்த விண்ணப்பம் மின் இணைப்பு வழங்குவதற்கு பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட்டதாகவும், அதனால் நில உடைமை உரிமை குறித்த ஆவணங்களை ஏழு நாட்களுக்குள் பிரிவு அலுவலகத்தில் கொடுக்கும்படி தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் என் அப்பா பெயரில் இருந்த விண்ணப்பத்தை என் பெயரில் மாற்றி சர்வீஸ்கேட்டு அதற்கான ஆவணங்களை பெற்று ஏழு நாட்களுக்குள் பெற்று கொசூர் பிரிவு அலுவலகத்திற்கு சென்று AE அவர்களை பார்த்து விண்ணப்பத்தை கொடுத்தபோது, அவர் என்னிடம் போர்மேன் திரு.சேகர் அவர்களிடம் கொடுக்கும்படி சொன்னதால் நான் எனது விண்ணப்பத்தை அவரிடம் கொடுத்தேன். அவர் விண்ணப்பத்தை பெற்று கொண்டு சர்வீஸ் சீக்கிரம் வந்துவிடும் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பிறகு ஒருநாள் போர்மேன் திரு.சேகர்,

P. [signature] 9/5/23

AE, EE ஆகியோர்கள் எங்களது நிலத்திற்கு வந்து ஆழ்துளை கிணற்றை பார்த்துவிட்டு சென்றார்கள். ஆனால் மின் இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் நான் கொசூர் மின்வாரிய பிரிவு அலுவலகத்திற்கு சென்று போர்மேன் திரு.சேகர் அவர்களை பார்த்து மின் இணைப்பு பற்றி கேட்டேன். ஆனால் போர்மேன் திரு.சேகர் அவர்கள் என்னிடம் நான் வருவாய் துறையினரிடம் சான்றிதழ் வாங்கி, உரிய காலத்திற்குள் சமர்பிக்கவில்லை என்றும் அதனால் அந்த ஆவணங்களை சமர்பிக்க கால நீட்டிப்பு வழங்கும்படி கேட்டு கடிதம் தயார்செய்து என்னிடம் கையொப்பம் வாங்கிகொண்டார். ஆனால் ஒன்றரை வருடகாலமாக எனக்கு மின் இணைப்பு வழங்கவில்லை. இதற்கிடையில் தமிழக அரசு மேற்படி பணம் செலுத்தி பெறும் மின் இணைப்பு திட்டத்தை இலவச மின் இணைப்பு திட்டமாக மாற்றி அறிவித்துவிட்டது. கடந்த 28.04.2023ம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு கொசூர் EB அலுவலகம் சென்று போர்மேன் திரு.சேகர் அவர்களை பார்த்து மின் இணைப்பு பற்றி கேட்டேன். அதற்கு அவர் பணம் 5 ஆயிரம் செலவாகும் என்றும், அதனால் அவரை இரண்டு மூன்று நாட்கள் கழித்து வந்து நேரில் பார்க்குமாறு சொன்னார். என்னால் நேரில் செல்ல முடியாததால் 2.5.2023-ம் தேதி மதியம் என்னுடைய செல் போன் நம்பர் 84899-79748-லிருந்து போர்மேன் திரு.சேகர் அவர்களின் செல் போன் எண்.94422-23578 க்கு போன் செய்து என்னால் நேரில் வந்து பார்க்க முடியவில்லை என்ற தகவலை சொன்னேன். அதற்கு அவர் கொசூர் EB ஆபிஸ்க்கு நேரில் வந்து பார்க்குமாறு சொன்னார். எனக்கு வயலில் வேலை இருந்ததால் போக முடியவில்லை. அதன்பிறகு கடந்த 06.05.2023-ம் தேதி காலை கொசூர் போர்மேன் திரு.சேகர் எனக்கு போன் செய்து மின் இணைப்பு கொடுப்பதற்கு ரூ.5000/-ம் ஆபிஸ்க்கு தனியாக செலவாகும் என்றும் அந்த பணத்தை மேலதிகாரிகளுக்கு நானே கொடுத்துவிட்டேன். அதனால் ரூ.5000/-ம் பணத்தை ரெடி பண்ணிட்டு கொசூர் பவர் ஆபிஸ்க்கு உடனே கொண்டு வந்து கொடு என்றார். அன்று என்னிடம் பணம் இல்லாததால் நான் போர்மேன் திரு.சேகரை பாார்க்க செல்லவில்லை. அதன்பிறகு அவர் 8.5.2023-ம் தேதி மதியம் எனக்கு போன் செய்து என்ன பணம் ரூ.5000/- ரெடியா என்று கேட்டார். அதற்கு என்னால் அவ்வளவு பணம் புறட்ட முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நாளைக்கு பணத்தை கொண்டு வந்து தரவில்லை என்றால் உன் பெயரில் சர்வீஸ் கிடைக்காது இப்படியே நடந்துகிட்டுதான் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார். எனது விவசாய நிலத்திற்கு அரசால் வழங்கப்படும் இலவச மின் இணைப்பு பெறுவதற்காக கொசூர் போர்மேன் திரு.சேகர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.5000/-ம் கொடுத்து என் பெயரில் மின் இணைப்பு பெற எனக்கு விருப்பமில்லை. எனவே கொசூர் போர்மேன் திரு.சேகர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (V.தங்கராசு) 08/05/2023.

Sir, Received the complaint on 08.05.2023 at about 17.00 hrs,. a confidential verification was conducted about the complaint through sources. The complaint was

found to be true and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 06.30 hrs on 09.05.2023. Sd/-(xxxxxxxx) 09.05.2023. P.Thangamani, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.V.Thangarasu, S/o.Tr.Veerasangan, Door No.11/230, Ottapatty, Kosur, Kadavur Taluk, Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

**(P.Thangamani)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.